பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

14 04 2024 **SUNDAY** 12 40 **PM**

வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் முறைகேடுகள் நடைபெற வாய்ப்பில்லை என்று தேர்தல் ஆணையம் திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

2. மக்களவைத் தேர்தலுக்கான பிஜேபியின் தேர்தல் அறிக்கை இன்று புதுதில்லியில் வெளியிடப்பட்டது.

3. பணவீக்கத்தை கட்டுப்படுத்த பிஜேபி தலைமையிலான மத்திய அரசு தவறிவிட்டதாக காங்கிரஸ் குற்றம் சாட்டியுள்ளது.

4. இஸ்ரேல் - ஈரான் இடையேயான மோதல் குறித்து இந்தியா கவலை தெரிவித்துள்ளது.

5. **Morelos Open Tennis** போட்டியில் இந்தியாவின் **Arjun Kadhe – Jeevan Nedunchezhiyan** இணை பட்டம் வென்றது

>>>>><<<<<<

மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் முறைகேடுகள் நடைபெற வாய்ப்பே இல்லை என்று தேர்தல் ஆணையம் திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் முறைகேடு நடைபெற வாய்ப்புள்ளதாக சமூகவலைதளங்களில் வெளியான காணொலி தவறானது என்று தேர்தல் ஆணையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களின் செயல்பாடுகள் அனைத்தும் வெளிப்படைத்தன்மையுடன் நடைபெறுவது, அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளின் முன்னிலையில் உறுதி செய்யப்பட்டிருப்பதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் முறைகேடுகள் நடைபெற வாய்ப்பில்லை என்பது அறிவியல் ரீதியாக உறுதி செய்யப்பட்டிருப்பதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<<

இதற்கிடையே, மக்களவைக்கு முதல்கட்டமாக வரும் 19ஆம் தேதி தேர்தல் நடைபெறவுள்ள 102 தொகுதிகளில் வாக்குப்பதிவிற்கான ஏற்பாடுகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வாக்குச்சாவடி சீட்டுகள் விநியோகம் செய்யும் பணி நிறைவடைந்துள்ளது.

வாக்குச்சாவடிகளில் வாக்காளர்களுக்கு தேவையான வசதிகளும் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு ஏற்பாடுகளும், வாக்குச்சாவடிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இதனை மாவட்ட தேர்தல் அதிகாரிகள் ஆய்வு செய்து வருகின்றனர்.

தேர்தலில் பணபலம் பயன்படுத்தப்படுவதை தடுப்பதற்கான கண்காணிப்பு நடவடிக்கைகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

தமிழகத்தில் இதுவரை உரிய ஆவணங்களின்றி கொண்டு செல்லப்பட்ட 324 கோடி ரூபாய் மதிப்பிலான பணம் மற்றும் பரிசுப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இதில் 151 கோடி ரூபாய் ரொக்கமாக பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

வாக்காளர்கள் 100 சதவீதம் வாக்களிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் வகையிலான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் மாநிலம் முழுவதும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குறிப்பாக, முதல்முறை வாக்காளர்களிடையே ஏற்படுத்தப்பட்டு வரும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மாணவர்களிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளன.

ராணிப்பேட்டை மாவட்டத்தில் நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பங்கேற்ற மாணவி, இந்த தேர்தலில் முதல்முறையாக வாக்களிக்கவுள்ளதை ஆர்வத்துடன் எதிர்நோக்கியுள்ளதாக தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - மாணவி 33 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

மக்களவைத் தேர்தலுக்கான பிஜேபியின் தேர்தல் அறிக்கை இன்று புதுதில்லியில் வெளியிடப்பட்டது.

அக்கட்சியின் மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி இதனை வெளியிட்டு பேசினார்.

- ✓ 70 வயதுக்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள் மற்றும் மூன்றாம் பாலினத்தவர் அனைவரும் ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டு, 5 லட்சம் ரூபாய் வரை இலவச சிகிச்சை வழங்கப்படும்,
- ✓ முத்ரா கடனுதவி திட்டத்திற்கான தொகை 20 லட்சம் ரூபாயாக அதிகரிக்கப்படும்,
- ✓ குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும் இலவச உணவுதானிய திட்டம் மேலும் ஐந்தாண்டுகளுக்கு நீட்டிக்கப்படும்,
- ✓ ஐநா பாதுகாப்புக் குழுவில் இந்தியாவிற்கு நிரந்தர உறுப்பினர் பதவி கிடைக்க உறுதியான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்,
- ✓ கடல்சார் பாதுகாப்பு மேலும் வலுப்படுத்தப்படும்,
- ✓ பொது சிவில் சட்டம் நடைமுறைப்படுத்தப்படும்,

என்பன உள்ளிட்ட பல்வேறு உறுதிமொழிகள் இந்த தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றுள்ளதாக திரு. நரேந்திர மோடி தெரிவித்தார்.

அம்பேத்கர் பிறந்த தினமான இன்று, பிஜேபியின் தேர்தல் அறிக்கையை வெளியிடுவது பெருமை அளிக்கக்கூடியது என்றும் அவர் தெரிவித்தார்.

2025ஆம் ஆண்டு பழங்குடியினர் ஆண்டாக கொண்டாடப்படும் என்ற அறிவிப்பும் இதில் இடம்பெற்றிருப்பதாக திரு. நரேந்திர மோடி கூறினார்.

>>>>><<<<<

பத்தாண்டுகளாக மத்தியில் ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் பிஜேபி தற்போது பல்வேறு வாக்குறுதிகளை அளித்திருப்பது ஏன் என்று காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே கேள்வி எழுப்பியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில், பத்தாண்டுகளாக இந்த வாக்குறுதிகளை ஏன் நிறைவேற்றவில்லை என்றும் வினவினார்.

பணவீக்கத்தை கட்டுப்படுத்தவும், புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கவும், பிஜேபி தலைமையிலான மத்திய அரசு தவறிவிட்டதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

தற்போது பிஜேபி அளித்துள்ள வாக்குறுதிகளை மக்கள் நம்பமாட்டார்கள் என்றும் திரு. மல்லிகார்ஜுன கார்கே தெரிவித்தார்.

>>>>><<<<<<

பாரத் ரத்னா அம்பேத்கரின் பிறந்த தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி, நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு. ஜெக்தீப் தங்கர், பிரதமர் திரு. நரேந்திர மோடி மற்றும் தலைவர்கள் பலர் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

இந்நாளையொட்டி நாடுமுழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

தமிழக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின், சென்னையில் உள்ள அம்பேத்கர் மணி மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்த அன்னாரது திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

அஇஅதிமுக சார்பில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. எடப்பாடி பழனிசாமி, சேலம் மாவட்ட மைய நூலகம் அருகேயுள்ள அம்பேத்கரின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

சென்னை அகில இந்திய வானொலி நிலைய வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அம்பேத்கரின் திருவுருவப் படத்திற்கு துணைத் தலைமை இயக்குநர் திரு. பாண்டி மற்றும் உயரதிகாரிகள் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

>>>>><<<<<<

ஈரான் – இஸ்ரேல் இடையேயான மோதல் குறித்து இந்தியா கவலை தெரிவித்துள்ளது.

இருநாடுகளுக்கு இடையேயான மோதல் காரணமாக எழுந்துள்ள சூழலை, இந்தியா உன்னிப்பாக கவனித்து வருவதாக வெளியுறவு துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

பதற்றத்தை தணிப்பதற்கான நடவடிக்கைகளை இருநாடுகளும் மேற்கொள்ள வேண்டும் என்று அதில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

பேச்சுவார்த்தைகள் மூலம் பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டும் என்றும் இந்தியா கேட்டுக் கொண்டுள்ளது.

இதற்கிடையே, இஸ்ரேல் மீது ஈரான் நடத்திய தாக்குதலுக்கு அமெரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

ஐநா பாதுகாப்பு குழுவும் இந்த மோதல் குறித்து கவலை தெரிவித்துள்ளது.

>>>>><<<<<<

பீரங்கி எதிர்ப்பு ஏவுகணை வெற்றிகரமாக சோதித்து பார்க்கப்பட்டது.

பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு நிறுவனமும், ராணுவமும் இணைந்து இந்த சோதனையை, ராஜஸ்தான் மாநிலம், போக்ரானில் நடத்தியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்த சோதனையின் போது ஏவுகணைகளின் செயல்பாடுகள் அனைத்தும் திட்டமிட்டபடி துல்லியமாக இருந்ததாக, பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு நிறுவனம் கூறியுள்ளது.

>>>>><<<<<<

தமிழ் புத்தாண்டு இன்று உற்சாகத்துடன் கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி, தலைவர்கள் பலர் வாழ்த்து செய்தி விடுத்துள்ளனர்.

>>>>><<<<<<

கிழக்கு கடற்கரைப் பகுதியில் 61 நாள் மீன்பிடி தடைக்காலம் இன்று நள்ளிரவு முதல் செயல்பாட்டுக்கு வருகிறது.

இதன் காரணமாக விசைப்படகுகள் அனைத்தும் கரைக்கு திரும்பியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(சவுண்ட் பைட் - செல்வன் ஜெபராஜ் 47 செகண்ட்ஸ்)

>>>>><<<<<<

ஆஸ்திரேலியாவில் உள்ள வணிக வளாகத்தில் நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவத்தில் 6 பேர் உயிரிழந்தனர்.

>>>>><<<<<<

சோமாலிய கடற்கொள்ளையர்களால் சிறைபிடிக்கப்பட்டிருந்த பங்களாதேஷ் சரக்கு கப்பல் விடுவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<<

ஹிமாச்சலப்பிரதேசம், உத்ராகண்ட், ஜம்மு-காஷ்மீர் லடாக்கில் நாளை வரை பலத்த காற்றுடன் கூடிய மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

>>>>><<<<<<

**Morelos Open Tennis** போட்டியில் இந்தியாவின் **Arjun Kadhe – Jeevan Nedunchezhiyan** இணை பட்டம் வென்றது.

மெக்ஸிகோவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்த இணை 7-6, 6-4 என்ற செட்கணக்கில் ஆஸ்திரேலியாவின் **Matthew Christopher Romios** – போலந்தின் **Piotr Matuszewski** இணையை வென்றது.

**>>>>><<<<<<**

**Candidates** செஸ் போட்டியின் 9வது சுற்று முடிவில் இந்தியாவின் **Gukesh** முதலிடத்தில் உள்ளார்.

கனடாவில் நடைபெற்று வரும் இப்போட்டியில் கூடுதல் புள்ளிகளுடன் அவர் முதலிடத்தில் நீடிக்கிறார்.

**>>>>><<<<<<**

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு கொல்கத்தாவில் நடைபெறவுள்ள ஆட்டத்தில் கொல்கத்தா – லக்னோ அணியை எதிர்கொள்கிறது.

இரவு 7.30-மணிக்கு மும்பையில் நடைபெறவுள்ள மற்றொரு போட்டியில் மும்பை – சென்னை அணியை எதிர்கொள்கிறது.

**>>>>>END<<<<<<**